சுருக்கம்

வேளாண்மை - உழவர் நலன் – தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் – 2023-2024-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கை - அறிவிப்பு எண்.2 மற்றும் 15 – 2023-2024-ஆம் ஆண்டில் 25 மாவட்டங்களை உள்ளடக்கிய 2 சிறுதானிய மண்டலங்களில் தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தினை ரூ.6529.076 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்துதல் – ரூ. 1978.000 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்குதல் மற்றும் ரூ.4551.076 இலட்சத்தினை மற்ற ஒன்றிய, மாநில அரசு திட்டங்களில் ஒருங்கிணைத்து செயல்படுத்திட அனுமதி வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.4) துறை

அரசாணை (நிலை) எண். 253 நாள் :21.11.2023

திருவள்ளுவர் ஆண்டு 2054
சோபகிருது வருடம், கார்த்திகை 5

படிக்க:

1. அரசு கடித (டி) எண்.139, வேளாண்மை-உழவர் நலத் (வேஉ_4) துறை, நாள் 31.05.2022.
2. அரசு கடித (டி) எண்.69, வேளாண்மை-உழவர் நலத் (வேஉ_4) துறை, நாள் 06.04.2023.
3. 2023-2024-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு, நாள் 21.03.2023.
4. வேளாண்மை ஆணையரின் கடித எண். நெ (ம) சி 3/78827/2021, நாள் 12.07.2023 மற்றும் 21.11.2023.

*****

ஆணை

மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதங்களில், சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, வரகு, சாமை, குதிரைவாலி, பனிவரகு போன்ற சிறுதானியங்களின் உற்பத்தி, பரப்பு மற்றும் நுகர்வு ஆகியவற்றை அதிகரிக்கும் பொருட்டு, மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் கீழ்க்கண்ட 25 மாவட்டங்களை உள்ளடக்கிய இரண்டு சிறுதானிய மண்டலங்கள் அமைக்க செயல் ஆணை வெளியிடப்பட்டது.

| வ. எண் | சிறுதானிய சிறப்பு மண்டலம் | 25 மாவட்டங்கள் |
|---|---|---|
| 1. | மண்டலம் – I (12 மாவட்டங்கள்- வடக்கு) | திருவண்ணாமலை, சேலம், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி வேலூர், நாமக்கல், திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு. |
| 2. | மண்டலம் – II (13 மாவட்டங்கள்- தெற்கு) | தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, தென்காசி, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருச்சி, கரூர், திண்டுக்கல், அரியலூர் பெரம்பலூர் மற்றும் புதுக்கோட்டை. |

2. இதனைத் தொடர்ந்து, 2023-2024-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், அறிவிப்பு எண்.2 மற்றும் 15-இல் முறையே தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் மற்றும் பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு என்ற தலைப்பில், மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

<u>தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்</u>

…………….2023-ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அறிவித்திருப்பதை ஒட்டி, தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படவுள்ளது.

…………மக்களிடையே சிறுதானியங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையில், போதிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு "சிறுதானிய திருவிழாக்களும்" இவ்வியக்கத்தின் மூலம் நடத்தப்படும். வரும் ஆண்டில், ஒன்றிய, மாநில அரசு நிதி உதவியுடன் 82 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

<u>பழங்குடியின விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு</u>

…………பல்வேறு மலைப்பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின விவசாயிகளுக்கு அனைத்து வகையிலும் உதவும் வகையில் வேளாண்மை-உழவர் நலத்துறையானது, பழங்குடியினர் நலத்துறை, ஊரக வளர்ச்சித்துறை, வனத்துறை, பெரும் பல் நோக்கு கூட்டுறவு சங்கங்கள் (LAMPS), தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றோடு இணைந்து செயல்படும்.

…………சிறுதானியங்களை தொகுப்பாக சாகுபடி செய்து, மதிப்புக்கூட்டி இலாபகரமான விலைக்கு விற்பனை செய்யும் வகையில் 70% மானியம் வழங்கப்படும்.

3. மேற்காணும் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், 2023-2024-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தினை 25 மாவட்டங்களை உள்ளடக்கிய, 2 சிறுதானிய மண்டலங்களில் செயல்படுத்திட தேவைப்படும் மொத்த தொகையான ரூ.9576.076 இலட்சத்தில், ரூ.5000.00 இலட்சத்தினை மாநில அரசு நிதி ஒதுக்கீட்டிலிருந்து, நிதி ஒப்பளிப்பு செய்து வழங்கிடவும், மீதமுள்ள ரூ.4576.076 இலட்சத்தினை மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம் (SADS), மாநில வேளாண் விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டம் (ATMA), தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம் (NADP), உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பு திட்டம் (FNS), வேளாண் இயந்திரமயமாக்கும் துணை இயக்கத் திட்டம் (SMAM) போன்ற ஒன்றிய, மாநில அரசின் திட்டங்களின் கீழ் ஒருங்கிணைத்து செயல்படுத்திட அனுமதி வழங்குமாறும், திட்ட செயலாக்கத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஒப்புதல் வழங்குமாறு கோரி, வேளாண்மை ஆணையர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

4. வேளாண்மை ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், 2023-2024-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தினை 25 மாவட்டங்களை உள்ளடக்கிய 2 சிறுதானிய மண்டலங்களில் செயல்படுத்த, தேவைப்படும் தொகையான ரூ. 6529.076 இலட்சத்தில், ரூ.1978.00 இலட்சத்தினை மாநில அரசு நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிதி ஒப்பளிப்பு செய்தும், மீதமுள்ள தொகையான ரூ.4551.076 இலட்சத்தினை மற்ற ஒன்றிய, மாநில அரசு திட்டங்களிலிருந்து கீழ்க்கண்டவாறு ஒருங்கிணைத்து இவ்வரசாணையின் இணைப்பு-I-இல் உள்ளவாறு இனவாரியாக செயல்படுத்த வேளாண்மை ஆணையருக்கு அனுமதி வழங்கியும் அரசு ஆணையிடுகிறது.

<u>தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் - துறை வாரியான நிதி ஒதுக்கீடு</u>

| வ. எ | துறை | 2023-24 நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சம்) | நிதி ஆதாரம் (ரூ. இலட்சம்) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | TNMM | SADS | ATMA | NADP | FNS | SMAM |
| 1 | வேளாண்மைத் துறை | 4052.576 | 301.50 | 540.276 | 10.00 | 180.00 | 3020.80 | --- |
| 2 | வேளாண்மை பொறியியல் துறை | 1340.00 | 540.00 | --- | --- | --- | --- | 800.00 |
| 3 | வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம் | 937.50 | 937.50 | --- | --- | --- | --- | --- |
| 4 | தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் | 149.00 | 149.00 | --- | --- | --- | --- | --- |
| 5 | அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி | 50.00 | 50.00 | --- | --- | --- | --- | --- |
| | மொத்தம் | 6529.076 | 1978.00 | 540.276 | 10.00 | 180.00 | 3020.80 | 800.00 |
| | மத்திய நிதி | | 0.00 | 0.00 | 6.00 | 108.00 | 1812.48 | 480.00 |
| | மாநில நிதி | | 1978.00 | 540.276 | 4.00 | 72.00 | 1208.32 | 320.00 |

5. மேலே பத்தி 4-இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

2401 - 00 - பயிர் வளர்ப்பு – 102 – உணவு தானியப் பயிர்கள் – மாநிலச் செலவினங்கள் – AG தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் – 309 உதவித்தொகை – 07 ஆராய்ச்சி

(DPC 2401-00-102-AG-30907) -:ரூ.139.000 இலட்சம்

2401 - 00 - பயிர் வளர்ப்பு – 102 – உணவு தானியப் பயிர்கள் – மாநிலச் செலவினங்கள் – AG தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் – 311 மானியங்கள் – 01 தனித்திட்ட மானியம்

(DPC 2401-00-102-AG-31101) -:ரூ.1443.400 இலட்சம்

2401 - 00 - பயிர் வளர்ப்பு – 789 – ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக்கூறுகள் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – AP தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் – 311 மானியங்கள் – 01 தனித்திட்ட மானியம்

(DPC 2401-00 789 – AP - 31101) -:ரூ.375.820 இலட்சம்

2401-00-பயிர் வளர்ப்பு – 796 – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் – மாநிலச் செலவினங்கள் – AI தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் – 311 மானியங்கள் – 01 தனித்திட்ட மானியம்

(DPC 2401-00 796 – AI - 31101) -:ரூ.19.780 இலட்சம்

6. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தினை 2023-2024-ஆம் ஆண்டில் இனம் வாரியாக செயல்படுத்திட, இவ்வரசாணையின் இணைப்பு II-இல் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது கடைப்பிடிக்குமாறு வேளாண்மை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. வேளாண் கருவிகளை கொள்முதல் செய்ய மின்னணு விலைப்புள்ளி முறை (e-tender) பின்பற்றப்பட வேண்டும் எனவும், திட்ட இனங்களை செயல்படுத்தும் பொருட்டு மாநில செலவினத்திற்கு Single Nodal Account உருவாக்கம் செய்ய பரிசீலனை வேண்டும் எனவும், திட்டத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்படும் தொகையில் நிதி சேமிப்பு ஏற்படுமாயின் நிதியாண்டு இறுதியில் உரிய அரசுக் கணக்கில் செலுத்த வேண்டும் எனவும் வேளாண்மை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

8. வேளாண்மைத்துறையால், சிறுதானிய தொகுப்பு விநியோகம் செய்வதைப் பொருத்தமட்டில் பயனாளிகள் எண்ணிக்கை மற்றும் பரப்பினை அதிகரிக்க வேண்டும் எனவும், ஒடிசா சிறுதானிய இயக்கத்தின் அடிப்படையில், ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டு சேவைகள் (ICDS) துறையிடம் திருந்திய கருத்துரு பெறப்பட வேண்டும் எனவும் வேளாண்மை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தினை 25 மாவட்டங்களில் செயல்படுத்துவது குறித்து மாதாந்திர முன்னேற்ற அறிக்கையினை அரசுக்கு அனுப்புமாறு வேளாண்மை ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இவ்வாணை, நிதித் துறையின் அ.சா.கு. எண். 315/ADS (GKT)/2023, நிதி (வேளாண்மை - உழவர் நலன்) துறை, நாள் 21.11.2023-இல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
வேளாண்மை ஆணையர், சென்னை-5.
இயக்குநர், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை-32.
தலைமைப் பொறியாளர் (வே.பொ), வேளாண்மை பொறியியல் துறை, சென்னை-35.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-3.
இயக்குநர், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, மகிழம்பூ,
கிரீன்வேஸ் சாலை,சென்னை - 28
மாநில முதன்மைக் பொதுக் கணக்காயர் (AAD), சென்னை – 18.
மாநில முதன்மைக் பொதுக் கணக்காயர் (G&SSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் பொதுக் கணக்காயர் (E&RSA), சென்னை – 18.
மாநில பொதுக் கணக்காயர், சென்னை-18.
மாநில பொதுக் கணக்காயர் (A & E), சென்னை-18 / (பெயரில்).
மாநில பொதுக் கணக்காயர் (Audit), சென்னை-18 / (பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-8.
உறைவிட தணிக்கை அலுவலர், மாநில முதன்மை கணக்காயர்
அலுவலகம் (சமூகத் தணிக்கைப் பிரிவு), சென்னை-9.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.

<u>நகல்:</u>
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலரின்
தனிச்செயலர், வேளாண்மை-உழவர் நலத்துறை, சென்னை-9.
நிதித் (வேளாண்மை-உழவர் நலன்) துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (வ & தி) துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (வே.உ.1/ வே.வி.3/ வே.பொ.2/ப.க.) துறை, சென்னை-9.
வேளாண்மை-உழவர் நலத் (அநமு -3) துறை, சென்னை-9.
உதவி நிரலர், வேளாண்மை-உழவர் நலத் துறை, சென்னை-9.
தொடர்புடைய கோப்பு எண்.5184628 /வேஉ_4/2023.
இருப்பு கோப்பு/ உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

வ. சசிகுமார் 22/11/2023
பிரிவு அலுவலர்
22/11/2023

## இணைப்பு - I

### அரசாணை (நிலை) எண். 253, வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.4) துறை, நாள் 21.11.2023

### தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் -2023-24

### துறை வாரியான மற்றும் இன வாரியான நிதி ஒதுக்கீடு

### வேளாண்மைத் துறை

| வ. எண் | இனங்கள் | அலகு | இன விவரம் | பொருள் இலக்கு | | மொத்த ஒதுக்கீடு (ரூ. இலட்சம்) | நிதி ஆதாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஒரு அலகுத் தொகை | இலக்கு | | |
| 1 | சிறுதானிய உழவர் குழு உருவாக்கம் | எண்கள் | பதிவேடுகள் மற்றும் ஆவணப்படுத்துதல் - (குழுவிற்கு - ரூ.1000/-) | 1000 | 100 | 1.00 | TNMM |
| 2 | சிறுதானிய உழவர் குழுக்களுக்கு பயிற்சி | எண்கள் | ரூ.10,000/-<br>(40 விவசாயிகள் x 1 நாள் x ரூ.250 நாள் ஒன்றிற்கு)<br>1) மதிய உணவு மற்றும் தின்பண்டங்கள் ரூ.4800/-<br>2) விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை ரூ.4000/-<br>3) மதிப்பூதியம் மற்றும் ஆவணப்படுத்துதல் ரூ.1200/-<br>----------<br>ரூ.10,000/- | 10000 | 50 | 5.00 | ATMA |
| 3 | சிறுதானிய பெண் உழவர் குழுக்களுக்கு பயிற்சி | எண்கள் | ரூ.10,000/-<br>(40 விவசாயிகள் x 1 நாள் x ரூ.250 நாள் ஒன்றிற்கு)<br>1) மதிய உணவு மற்றும் தின்பண்டங்கள் - ரூ.4800/-<br>2) விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை ரூ.4000/-<br>3) மதிப்பூதியம் மற்றும் ஆவணப்படுத்துதல் - ரூ.1200/-<br>----------<br>ரூ.10,000/- | 10000 | 50 | 5.00 | ATMA |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 4 | பட்டியலின மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு 70% மானியத்தில் சிறுதானிய தொகுப்பு விநியோகம் | எக்டர் | 1. விதைகள்<br>10 கிலோ/எக்டர் - ரூ.700-<br>2. நுண்ணூட்டக் கலவை<br>12.5 கிலோ/எக்டர்<br>ரூ. 101/கிலோ - ரூ.1263-<br>3. திரவ உயிர் உரங்கள்<br>a) அசோஸ்பைரில்லம்<br>0.5 லி / எக்டர்- ரூ. 150-<br>b)பாஸ்போ பாக்டீரியா<br>0.5 லி / எக்டர் – ரூ. 150-<br>4. அறுவடை மானியம்- ரூ.1000-<br>ரூ.3263<br>அதிகபட்சம் ரூ.3000/எக்டர் | 2100<br>(70%) | 5000 | 105.00 | TNMM |
| 5 | இதர விவசாயிகளுக்கு 50% மானியத்தில் சிறுதானிய தொகுப்பு விநியோகம் செய்தல் | எக்டர் | 1. விதைகள்<br>10 கிலோ/எக்டர் - ரூ.700-<br>2. நுண்ணூட்டக் கலவை<br>12.5 கிலோ/எக்டர்<br>ரூ. 101/கிலோ - ரூ.1263-<br>3. திரவ உயிர் உரங்கள்<br>அசோஸ்பைரில்லம்<br>0.5 லி / எக்டர்- ரூ. 150-<br>பாஸ்போ பாக்டீரியா<br>0.5 லி / எக்டர் – ரூ. 150-<br>4. அறுவடை மானியம்- ரூ.1000-<br>ரூ.3263<br>அதிகபட்சம் ரூ.3000/எக்டர் | 1500<br>(50%) | 5000 | 75.00 | TNMM |
| 6 | சிறுதானியங்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு உழவு மானியம் வழங்குதல் | எக்டர் | நிலத் தயாரிப்பு மற்றும் உழவுப்பணி - @ ரூ.500/மணி<br>4 மணி/எக்டர் – இரு முறை உழவிற்கு - ரூ.4000-<br>(50% மானியத்தில்) | 2000<br>(50%) | 9000 | 180.00 | NADP |
| 7 | இயற்கை உரம் விநியோகம் செய்தல் | எக்டர் | 12.5 கிலோ/ எக்டர் – ரூ.260/கிலோ -ரூ.3250-<br>(அதிகபட்சம் ரூ. 3000-க்கு 40% மானியத்தில்) | 1200<br>(40%) | 10000 | 120.00 | TNMM |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | குறுவையில் மாற்றுப்பயிர் சாகுபடி | ஏக்கர் | 1. விதைகள்- @4கிலோ/ஏக்கர் ரூ.76/கிலோ (4x76= ரூ.304-)<br>2.சூடோமோனாஸ் – @1கிலோ/ஏக்கர் ரூ.180/கிலோ + தெளிப்பு கூலி – ரூ.800 (2 நபர் x 400)<br>3.திரவ உயிர் உரங்கள்<br><u>i) அஸோஸ்பைரில்லம்</u> 500 மி.லி/ஏக்கர் – ரூ.150<br><u>ii)பாஸ்போ:பாக்டீரியா</u>- 500 மி.லி/ஏக்கர் – ரூ.150<br>4. திரவ இயற்கை உரங்கள் மற்றும் அதன் தெளிப்புச் செலவினம் - 500 மி.லி / ஏக்கர் + தெளிப்புக்கூலி - ரூ.750/ஏக்கர்<br>(50 % மானியம் (அ) அதிகபட்ச மானியம் ரூ.1150/ஏக்கர்) | 1150 | 33,937 | 390.276 | SADS |
| 9 | நெல்லுக்குப் பின் மாற்றுப்பயிர் சாகுபடி திட்டத்தின் கீழ் விவசாயிகளை சிறுதானியம் பயிர்களை சாகுபடி செய்திட ஊக்குவித்தல் | ஏக்கர் | 1. விதைகள்- @4கிலோ/ஏக்கர் ரூ.76/கிலோ (4x76= ரூ.304-)<br>2. சூடோமோனாஸ் – @1கிலோ/ஏக்கர் ரூ.180/கிலோ + தெளிப்பு கூலி – ரூ.400 (1 நபர் x 400)<br>(50 % மானியம் (அ) அதிகபட்ச மானியம் ரூ.400/ஏக்கர்) | 400 | 37,500 | 150.00 | SADS |
| 10 | சிறுதானியம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சிறுதானிய தொகுப்பு | | 1.சிறுதானிய செயல் விளக்கத் தளை<br>2.உயர்விளைச்சல் விதைகள் விநியோகம்<br>3. சான்று விதை உற்பத்தி மானியம்<br>4. மண்வளம் மற்றும் பயிர் பாதுகாப்பு<br>5. பயிற்சி<br>6. விழிப்புணர்வு முகாம் | | | 3020.80 | FNS |
| 11 | விளம்பரம், ஆவணப்படுத்தல் மற்றும் இதர செலவினங்கள் | | | | | 0.50 | TNMM |
| | | | | | வேளாண்மைத் துறை மொத்தம் | 4052.576 | |

## வேளாண்மை பொறியியல் துறை

| வ. எண் | இனங்கள் | அலகு | இன விவரம் | பொருள் இலக்கு அலகுத் தொகை | இலக்கு | மொத்த ஒதுக்கீடு (ரூ.இலட்சம்) | நிதி ஆதாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | தரிசு நிலங்களை விளை நிலங்களாக மாற்றுதல் | எக்டர் | தரிசு நிலங்களில் சிறுதானிய சாகுபடிக்கு உழவு மேற்கொள்ள மானியம் வழங்குதல் (அதிகபட்ச மானியம் ரூ.5400/எக்டர்) | 5,400 | 10000 | 540.00 | TNMM |
| 2 | கிராம அளவிலான வேளாண் இயந்திரங்கள் வாடகை மையம் அமைத்தல் | எண்கள் | வேளாண் வாடகை மையத்திற்கான இயந்திரங்கள் கொள்முதல் (80% மானியம் (அ) ரூ.8 லட்சம்) | 8,00,000 | 100 | 800.00 | SMAM |
| | வேளாண்மை பொறியியல் துறை மொத்தம் | | | | | 1340.00 | |

## வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

| வ. எண் | இனங்கள் | அலகு | இன விவரம் | பொருள் இலக்கு | | மொத்த ஒதுக்கீடு (ரூ.இலட்சம்) | நிதி ஆதாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | அலகுத் தொகை | இலக்கு | | |
| 1 | சிறுதானியங்கள் பதப்படுத்தும் மையங்கள் - ரூ.25,00,000 @75% மானியம் (மீதத்தொகை, கீழ்காணும் திட்டங்களிலிருந்து பெற்றுக்கொள்ள வழிவகை செய்ய வேண்டும். AIF / Bank Loan / பயனாளிகள் FPO, FPG, Individual Agri Entrepreneur) | எண்கள் | 50 எண்கள் - 75% மானியம் - ரூ.18,75,000 | ரூ.18,75,000 | 50 | 937.50 | TNMM |
| வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை-மொத்தம் | | | | | | 937.50 | |

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

| வ. எண் | இனங்கள் | அலகு | இன விவரம் | பொருள் இலக்கு | | மொத்த ஒதுக்கீடு (ரூ.இலட்சம்) | நிதி ஆதாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | அலகுத் தொகை | இலக்கு | | |
| 1 | ஆராய்ச்சி | | | | | | |
| I. | ஆராய்ச்சி கட்டமைப்பு உருவாக்குதல் | | | | | | |
| i | அமினோ அஸிட் அனலைஸர் | 1 | அமினோ அஸிட் அனலைஸர் கொள்முதல் | 55.00 | 1 | 55.00 | TNMM |
| ii | குளோரோஃபில் மீட்டர் | 1 | குளோரோஃபில் மீட்டர் கொள்முதல் | 5.00 | 1 | 5.00 | TNMM |
| | | | | | மொத்தம் | 60.00 | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| II. | தொடர் செலவினம் | | | | | | |
| (அ) | பயன்பாட்டுப் பொருட்கள் கொள்முதல் மற்றும் தொடர் செலவினம் | | | | | | |
| i | இடுபொருள், சாகுபடிச் செலவினம், ப்பினோ டைப்பிங், ஜீனோ டைப்பிங் மற்றும் சோதனை செலவினங்கள் | - | தொடர் செலவினம் மேற்கொள்ளுதல் | - | - | 50.00 | TNMM |
| ii | போக்குவரத்து, எரிபொருள் மற்றும் இதர செலவினம் | - | தொடர் செலவினம் மேற்கொள்ளுதல் | - | - | 5.00 | TNMM |
| iii | செயல் விளக்கம் மற்றும் வயல் விழாக்கள் மூலம் உயர் விளைச்சல் இரகங்களை பிரபலப்படுத்துதல், | - | தொடர் செலவினம் மேற்கொள்ளுதல் | - | - | 12.00 | TNMM |
| | | | | | தொடர் செலவினம் மொத்தம் | 67.00 | |
| III | மூல விதைகள் மற்றும் வல்லுநர் விதைகள் உற்பத்திக்கான இடு பொருள் மற்றும் சாகுபடி செலவினம் | - | தொடர் செலவினம் மேற்கொள்ளுதல் | - | - | 12.00 | TNMM |
| | | | | | ஆராய்ச்சி மொத்தம் (I + II +III) | 139.00 | |
| 2. | மூல விதைகள் மற்றும் வல்லுநர் விதைகளின் உற்பத்தியை பலப்படுத்துதல் | - | தொடர் செலவினம் மேற்கொள்ளுதல் | - | - | 10.00 | TNMM |
| | | | | | தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் மொத்தம் | 149.00 | |

## அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி

| வ. எண் | இனங்கள் | அலகு | இன விவரம் | பொருள் இலக்கு | | மொத்த ஒதுக்கீடு (ரூ.இலட்சம்) | நிதி ஆதாரம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | அலகுத் தொகை | இலக்கு | | |
| 1 | சிறுதானியம் தொடர்பான தொழில்நுட்ப பணிமனைகள் | எண்கள் | - | 2.00 | 5 | 10.00 | TNMM |
| 2 | வேளாண்மை மற்றும் சகோதரத்துறை அலுவலர்களுக்கான பயிற்சிகள் | எண்கள் | - | 1.00 | 20 | 20.00 | TNMM |
| 3 | சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் குழந்தைகள் நலப் பாதுகாப்பு அலுவலர்களுக்கான பயிற்சி | எண்கள் | - | 1.00 | 20 | 20.00 | TNMM |
| அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி - மொத்தம் | | | | | | 50.00 | |

### சுருக்கம்

| வ.எண். | துறை | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வேளாண்மைத் துறை | 4052.576 |
| 2. | வேளாண்மை பொறியியல் துறை | 1340.00 |
| 3. | வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை | 937.50 |
| 4. | தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் | 149.00 |
| 5. | அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி | 50.00 |
| மொத்தம் | | 6529.076 |

அபூர்வா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

வ. சசிகுமார் 22/11/2023
பிரிவு அலுவலர்
22-11-2023

**இணைப்பு-II**

**அரசாணை (நிலை) எண். 253, வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.4) துறை, நாள் 21.11.2023**

**தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் 2023-24**

**வழிகாட்டு நெறிமுறைகள்**

1. **சிறுதானிய வகைகள் :**

**சிறுதானியங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன**

i. **சிறு தானியங்கள் (Major Millets)**

- சோளம்
- கம்பு
- மக்காச்சோளம்
- கேழ்வரகு

ii. **குறுந்தானியங்கள் (Minor Millets)**

- தினை
- வரகு
- சாமை
- பனிவரகு
- குதிரைவாலி

**2. சிறுதானியங்களின் நன்மைகள்:**

- சிறுதானியங்கள் ஊட்டச்சத்து மிக்கவை.
- உடல் ஆரோக்கியத்திற்கு நல்லவை.
- குறைந்த வயதில், குறைந்த நீரில் உற்பத்தி செய்ய ஏற்றவை.
- சிறுதானியங்கள் வறட்சியிலும் வளர்பவை ; வளமற்ற மண்ணிலும் துளிர்ப்பவை
- மருத்துவ குணம் அதிகம் நிறைந்தவை.
- சிறுதானியங்களுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகம்
- சிறுதானியங்களை மதிப்புக்கூட்டுப் பொருள்களாக மாற்றலாம்

**3. சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023**

இந்திய அரசின் வேண்டுகோளை ஏற்று, ஐக்கிய நாடுகள் பொதுச்சபை 2023 - ஆம் ஆண்டை சர்வதேச சிறுதானிய ஆண்டாக

அறிவித்துள்ளதை தொடர்ந்து தமிழ்நாட்டில் சிறுதானியங்களின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், சிறுதானியங்களின் உற்பத்தி, நுகர்வு ஆகியவற்றை அதிகரிக்கும் வகையிலும், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

4. <u>சிறுதானியங்களின் சாகுபடிப் பரப்பு:</u>

- தமிழ்நாட்டில் சிறுதானியப் பயிர்கள், இயல்பாக 8.938 இலட்சம் எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இவற்றின் உற்பத்தி 31.346 இலட்சம் மெ.டன் ஆகும்.
- தமிழ்நாட்டின் மொத்த உணவு தானிய உற்பத்தியில் நெல்லுக்கு அடுத்தபடியாக சிறுதானியங்கள் சுமார் 33% பங்களிக்கின்றன.
- தமிழ்நாட்டில் 2023-24 ஆம் ஆண்டில், 9.83 இலட்சம் எக்டர் பரப்பில், சிறுதானியங்கள் பயிரிடவும், 38.29 இலட்சம் மெ.டன் உற்பத்தியை எய்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

<u>5. சிறுதானிய சிறப்பு மண்டலங்கள்:</u>

முதலமைச்சரின் மானாவாரி நில மேம்பாட்டு இயக்கம் முடிவுற்ற நிலையில், மானாவாரி நில விவசாயிகளின் நலனுக்காக சிறுதானியப் பயிர்களின் பரப்பினை அதிகரித்து, அதிக உற்பத்தியை எய்த, அதிக வாய்ப்புள்ள 25 மாவட்டங்களை உள்ளடக்கிய, இரண்டு சிறுதானிய சிறப்பு மண்டலங்கள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ளது.

i. <u>வடக்கு மண்டலம்</u> -

| வ.எண் | மாவட்டங்கள் |
|---|---|
| 1. | கடலூர் |
| 2. | விழுப்புரம் |
| 3. | கள்ளக்குறிச்சி |
| 4. | வேலூர் |
| 5. | திருவண்ணாமலை |
| 6. | சேலம் |
| 7. | தருமபுரி |
| 8. | கிருஷ்ணகிரி |
| 9. | நாமக்கல் |
| 10. | திருப்பூர் |
| 11. | கோயம்புத்தூர், |
| 12. | ஈரோடு |

ii. <u>தெற்கு மண்டலம்</u>

| வ.எண் | மாவட்டங்கள் |
|---|---|
| 1. | மதுரை |
| 2. | தேனி |
| 3. | திண்டுக்கல் |
| 4. | இராமநாதபுரம் |
| 5. | விருதுநகர் |
| 6. | தூத்துக்குடி |
| 7. | பெரம்பலூர் |
| 8. | அரியலூர் |
| 9. | சிவகங்கை |
| 10. | தென்காசி |
| 11. | கரூர் |
| 12. | திருச்சி |
| 13. | புதுக்கோட்டை |

மேற்காணும் 25 மாவட்டங்களில் "தமிழ்நாடு சிறுதானிய இயக்கம்" செயல்படுத்தப்படும்.

6. <u>தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் குறிக்கோள்கள்:</u>

i. பொதுமக்களிடையே அரிசி உணவு அதிகரித்து, சிறுதானிய பயன்பாடு வெகுவாக குறைந்துள்ளதால், சிறுதானியங்களின் பயன்கள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

ii. சிறுதானியப் பயிர்களின் சாகுபடிப் பரப்பை அதிகரித்தல்

iii. அதிக விளைச்சல் தரக்கூடிய, புதிய சிறுதானிய இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே அறிமுகம் செய்து, சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரித்தல்

iv. சிறுதானிய சாகுபடியில், வேளாண் இயந்திரங்களின் பயன்பாட்டினை அதிகரித்தல்

v. சிறுதானியங்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

vi. விவசாயிகளுக்குத் தேவையான, சிறுதானிய பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக் கூட்டுதலுக்குத் தேவையான இயந்திரங்கள் கிடைப்பதை உறுதி செய்தல்

vii. சிறுதானியங்களை மதிப்புக் கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

viii. பொது மக்களிடையே, சிறுதானியங்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, சிறுதானியங்களின் பயன்பாட்டினை அதிகரித்தல்

ix. பொது மக்களுக்கு சிறுதானியங்கள் மூலம், சரிவிகித உணவு கிடைப்பதை உறுதி செய்தல்

x. சிறுதானியங்கள் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, நிலையான வருமானம் கிடைக்க வழிவகை செய்தல்

<u>7. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ள இனங்களுக்குரிய வழிகாட்டு நெறிமுறைகள் :</u>

<u>1. வேளாண்மைத் துறை:</u>

1. அனைத்து விவசாயிகளும் தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் பயனைப் பெற தகுதியுடையராவர்.
2. சிறு / குறு / ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மற்றும் பெண் விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.
3. பயனாளி விவசாயிகளைத் தேர்வு செய்யும் பொழுது, ஆதி திராவிடர் (19%) மற்றும் பழங்குடியின (1%) விவசாயிகளுக்கு உரிய ஒதுக்கீட்டின்படி, தேர்வு செய்திட வேண்டும்.
4. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்காக, ஒதுக்கப்பட்ட இனம் / நிதிகளின்படி திட்டத்தை செயல்படுத்திட வேண்டும்.
5. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ், ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 எக்டர் (5 ஏக்கர்) பரப்பிற்கு மானியம் வழங்கப்பட வேண்டும்.
6. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ், வரும் பல்வேறு திட்ட இனங்களை, அந்தந்த ஒன்றிய அரசு/மாநில அரசு திட்டங்களின் கீழ் வகுக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட வேண்டும்.
7. பொருட்கள் கொள்முதல் மற்றும் கட்டுமானப்பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ளும்பொழுது, அரசாணை (நிலை) எண்.93 மற்றும் 94, நிதித்துறை (சம்பளம்), நாள்.30.03.2023ன்படி, ஒப்பந்தப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

8. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் குறித்து, மாவட்டம்/வட்டாரம்/கிராம அளவில், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், பரவலாக விளம்பரம் செய்யப்பட வேண்டும்.
9. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் பயன் பெற உள்ள பயனாளி விவசாயிகளின் பதிவு, உழவன் செயலி (UZHAVAN APP) மூலமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
10. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்திற்கான, பயனாளிகள் முன்னுரிமைப் பதிவேடு, வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் முறையாகப் பராமரிக்கப்பட வேண்டும்.
11. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் பயிரிடப்படும், பயிர் சாகுபடி பரப்பு, முறைப்படி ஒத்திசைவு செய்யப்பட வேண்டும்.
12. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் வழங்கப்படும் பொருள் மற்றும் நிதி இலக்குகளை குறைவின்றி, நிதி ஆண்டிற்குள் முழுமையாக சாதனை எய்திட வேண்டும்.
13. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் தொடர்பான, பதிவேடுகள், புகைப்படங்கள், வீடியோ படங்கள், பத்திரிகை பிரசுரங்கள், வெற்றிக் கதைகள் மற்றும் இதர ஆவணங்களை முறையாகப் பராமரிப்பதோடு, அதன் விவரங்களை வேளாண்மை ஆணையரகத்திற்கு அனுப்பிட வேண்டும்.
14. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் தொடர்பான, மாதாந்திர முன்னேற்ற அறிக்கைகளை தவறாமல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

<u>2.வேளாண் பொறியியல் துறை</u>

a) <u>தரிசு நிலங்களில் சிறுதானிய சாகுபடிக்கு உழவு மேற்கொள்ள மானியம் வழங்கல்</u>

- சிறுதானிய சாகுபடி மேற்கொள்ள வேண்டிய தரிசு நிலத் தொகுப்புகளை, சிறுதானிய மண்டலங்களில் உள்ள மாவட்டங்களில், வேளாண் பொறியியல் துறை மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர்களால் கண்டறிந்து, பயனாளிகளின் பட்டியலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரும், சம்மந்தப்பட்ட வேளாண்மை செயற் பொறியாளரும் இணைந்து இறுதி செய்திட வேண்டும்.
- இறுதி செய்யப்பட்ட தரிசு நிலத் தொகுப்புகளில் உள்ள விவசாயிகள், நிலத் தயாரிப்பு உழவுப் பணிகளை மேற்கொள்ளல் தொடர்பான விண்ணப்பங்களை, சம்பந்தப்பட்ட உபகோட்டத்தில் உள்ள வேளாண்மைப் பொறியியல் துறையின் உதவி

செயற்பொறியாளர் (வேபொ) அவர்களிடம் கீழ்க்கண்ட சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்

1. ஆதார் அட்டை நகல்
2. நிலச்சான்றிதழ்களான சிட்டா, பட்டா மற்றும் நில வரைபடம் (FMB)
3. வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்கத்தின் நகல்
4. சிறுதானியசாகுபடி மேற்கொள்வதற்கான உறுதிமொழிப்படிவம்

➢ வேளாண்மைப் பொறியியல் துறை உதவி பொறியாளர் (வேபொ) / இளநிலைப் பொறியாளர் / வே.பொ. ஆகியோர், தரிசு நிலத் தொகுப்பை ஆய்வு செய்து, உழவு பணி செய்வதன் அவசியத்தை சம்மந்தப்பட்ட விவசாயியுடன் கலந்தாலோசித்து, செய்யப்பட வேண்டிய பணிகளை விவசாயி கையொப்பத்துடன் கூடிய ஒப்புதல் பெற்று, இறுதி செய்து, நிலத்தின் தற்போதைய புகைப்படத்துடன் சம்மந்தப்பட்ட வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற் பொறியாளர் (வேபொ) அவர்களிடம் சான்றொப்பம் இட்டு வழங்க வேண்டும்.

➢ சான்றளிக்கப்பட்டவுடன், தொகுப்பில் உள்ள விவசாயிகள், தாங்களே தங்கள் சொந்த செலவில், தனியார் வாடகை இயந்திரங்கள் மூலமாக, உழவு பணிகளை மேற்கொள்ள வேண்டும். உழவுப்பணிகளுக்கான மானியம், பின்னேற்பு மானியமாக வழங்கப்படும்.

➢ நிலத் தயாரிப்பு, உழவுப் பணிகளுக்கான செலவினம் மற்றும் மானிய விவரம் கீழ்க்காணும் விவரப்படி வழங்கப்படும்.

| வ. எண் | மேற்கொள்ளப்படும் பணிகள் விவரம் | | மானிய விவரம் |
|---|---|---|---|
| *i.* | டிராக்டர் - சட்டிக் கலப்பை மூலம் உழுதல் ஒரு மணி நேரத்திற்கு ரூ.1100/- வீதம் ஒரு ஹெக்டருக்கு *5*மணி நேரம் உழுதல் | 1100 x 5 = 5500<br>ரூ.5500/- | இதில் 40 சதவீதம் மானியமானது ஹெக்டர் ஒன்றிற்கு அதிகபட்சமாக ரூ.5400/- பின்னேற்பு மானியமாக வழங்கப்படும். |
| *ii.* | டிராக்டர் - கொத்து கலப்பை மூலம் உழுதல் ஒரு மணி நேரத்திற்கு ரூ.1100/- வீதம் ஒரு ஹெக்டருக்கு *3*மணி நேரம் உழுதல் | 1100 x 3= 3300<br>ரூ.3300/- | |
| *iii.* | டிராக்டர் - சுழற் கலப்பை மூலம் உழுதல் ஒரு மணி நேரத்திற்கு ரூ.1200/- வீதம் ஒரு ஹெக்டருக்கு *4*மணி நேரம் உழுதல் | 1200 x 4 = 4800<br>ரூ.4800/- | |
| | மொத்தம் | ரூ.13600/- | |

• <u>குறிப்பு</u>- தேவையின் அடிப்படையில் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு மட்டும் செய்து முடிக்கப்பட்ட பரப்பளவின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட 40 சதவீதம் மானியத்தொகை கணக்கிடப்பட வேண்டும்.

- விவசாயிகள் மேற்காணும் பணிகளை தாங்களே மேற்கொண்டு தரிசு நிலம் சாகுபடிக்கு உகந்த நிலமாக மாற்றப்பட்டதற்கான உறுதிமொழிச் சான்றை அளிக்க வேண்டும்.
- வேளாண்மைப் பொறியியல் துறை உதவி பொறியாளர்(வேபொ) / இளநிலைப் பொறியாளர் (வே.பொ) ஆகியோர் சம்பந்தப்பட்ட தொகுப்பில் உள்ள நிலத்தினை நேரில் பார்வையிட்டு தரிசு நிலம் சிறுதானிய சாகுபடிக்கு உகந்த நிலமாக மாற்றப்பட்டதற்கான சான்றிதழினை சம்மந்தப்பட்ட வேளாண்மை செயற் பொறியாளருக்கு அளிக்க வேண்டும்.
- மேற்குறிப்பிட்ட விவசாயியின் சான்று அடிப்படையில் சம்பந்தப்பட்ட உதவிப் பொறியாளர் (வே.பொ) / இளநிலைப் பொறியாளர் (வே.பொ)கள் விவசாயிகளின் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்குண்டான பரப்பளவினை அளவீடு செய்து, பணி முடிவுபெற்ற புகைப்படத்துடன் அதற்குரிய மானியத்தொகையினை, பின்னேற்பு மானியமாக விடுவிக்க ஏதுவாக, உதவி செயற் பொறியாளர் (வே.பொ)களுக்கு பரிந்துரைக்க வேண்டும்.
- மேற்கண்ட பரிந்துரையின் அடிப்படையில் உதவி செயற் பொறியாளர் (வே.பொ)கள் பின்னேற்பு மானியத்தினை சம்பந்தப்பட்ட விவசாயிகளின் வங்கிக்கணக்கில் நேரிடையாக செலுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

b) **கிராம அளவிலான இயந்திர வாடகை மையங்கள்**

சர்வதேச சிறுதானியங்கள் ஆண்டான 2023-ல், சிறுதானிய சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் சிறுதானிய இயக்கத்தின் இரண்டு சிறப்பு மண்டலங்களை உள்ளடக்கிய தூத்துக்குடி, விருதுநகர், மதுரை, தென்காசி, இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருச்சி, கரூர், திண்டுக்கல், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, சேலம், கள்ளக்குறிச்சி, கடலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, வேலூர், நாமக்கல், ஈரோடு, திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய வேளாண்மை இயந்திர சக்தி 2.5 kW/Ha கீழ் உள்ள இம்மாவட்டங்களில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் 2023-24 ஆம் நிதியாண்டில் 100 கிராம அளவிலான வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையங்கள் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படுகிறது. ஒவ்வொரு வாடகை மையத்திற்கும் SMAM திட்டத்தின் கீழ் இனம் 6-இல் உள்ள 'தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்தில் பண்ணை இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தலுக்கு வழங்கப்படக் கூடிய அதிகபட்ச மானியமானது ஒவ்வொரு இயந்திரத்திற்கான மானியத்தினை கணக்கிட்டு (80%) அதன் கூட்டுத் தொகை அதிகபட்சமாக ரூ.8 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

3. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை

சிறுதானியங்களை பதப்படுத்தும் மையங்கள்

சிறுதானியங்கள் அதிகமாக சாகுபடி செய்யப்படும் மாவட்டங்களில் உள்ள ஆர்வமுள்ள பயனாளிகள், மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழுவின் (DLMC) உரிய ஒப்புதலுடன் இத்திட்டத்தின் பயன்களைப் பெறலாம்.

புதிய மற்றும் ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள சிறுதானிய பதப்படுத்தும் மையங்களை விரிவுபடுத்துவதற்கான நிதி ஆதரவு இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுவதோடு, வங்கியின் மூலம் செயல்படுத்தப்படும் வகையில் இத்திட்ட செயல்பாடு அமைய வேண்டும்.

தகுதியான பயனாளிகள்:

உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் / கிராமப்புற இளைஞர்கள் / வேளாண் தொழில்முனைவோர்கள் / வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF) பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் நிதி உதவி பெறத் தகுதியுடையவர்கள்.

தானியம் சுத்தம் செய்யும் இயந்திரம் (Pre Cleaner), கல் மற்றும் தூசி நீக்கும் இயந்திரம் (Destoner), தோல் நீக்கும் இயந்திரம் (Dehuller), மாவு அரைக்கும் இயந்திரம் (Pulverizer), தானியத்தை நிறம் பார்த்து பிரிக்கும் இயந்திரம்-2 ஷூட்-64 சேனல் (Multi grain Color Sorter -2 chute-64 channel), தானிய மெருகூட்டும் இயந்திரம் (Grain polisher), சிப்பமிடும் இயந்திரம் (Packing Machine), எடையிடும் இயந்திரம் (Weighing machine) மற்றும் முத்திரையிடும் இயந்திரம் (Sealing Machine (Bag Closer)) போன்ற முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள் அனைத்தையுமோ அல்லது தேவைகளின் அடிப்படையில் தனிப்பட்ட இயந்திரங்களையும் பெறலாம்.

சிறுதானிய முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள் நிறுவுதல்

| வ. எண் | இயந்திர விவரங்கள் | கொள்ளளவு | விலை (ரூ. இலட்சத்தில்) | அங்கீகரிக்கப்பட்ட மானியம் (75%) | அங்கீகரிக்கப்பட்ட மானியம் (Rounded off) (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | தானிய சுத்தம் செய்யும் இயந்திரம் (Pre Cleaner) | 500 kg/hr | 1.15 | 0.8625 | 0.90 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | கல் மற்றும் தூசி நீக்கும் இயந்திரம் (Destoner) | 500 kg/hr | 1.50 | 1.1250 | 1.15 |
| 3 | தோல் நீக்கும் இயந்திரம் (Dehuller) | 500 Kg/hr | 6.00 | 4.5000 | 4.52 |
| 4 | மாவு அரைக்கும் இயந்திரம் (Pulverizer) | 30 Kg/hr | 1.20 | 0.9000 | 1.00 |
| 5 | தானியத்தை நிறம் பார்த்து பிரிக்கும் இயந்திரம்-2 ஷூட்-64 சேனல், (Multi grain Color Sorter -2 Chute-64channel) | 100-200 Kg/hr | 7.00 | 5.2500 | 5.35 |
| 6 | தானிய மெருகூட்டும் இயந்திரம் (Grain polisher) | 100 Kg/hr | 1.50 | 1.1250 | 1.15 |
| 7 | சிப்பமிடும் இயந்திரம் (Packing Machine) | 0-100 g/2-3 tons/day | 6.00 | 4.5000 | 4.52 |
| 8 | எடையிடும் இயந்திரம் (Weighing machine) | 0-100 Kg | 0.12 | 0.0900 | 0.10 |
| 9 | முத்திரையிடும் இயந்திரம் (Sealing Machine (Bag Closer)) | | 0.08 | 0.0600 | 0.06 |
| | மொத்தம் | | 24.55 (or) 25.00 | 18.4125 | 18.75 |

(இத்திட்டத்தின் கீழ், இயந்திரங்களுக்கான அனுமதிக்கப்பட்ட மானிய சதவீதம் 75% அதிகபட்சமாக ரூ 18.75இலட்சம்)

- சிறுதானிய முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள் அமையவுள்ள மையங்களுக்கு, வங்கியின் மூலம் மானியம் வழங்கப்படும்.
- இயந்திரங்கள் வாங்குவதற்கு மட்டும் மானியம் வழங்கப்படும்.
- விண்ணப்பதாரர் வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF) திட்டத்தின் கீழ் வட்டி மானியத்திற்கும் தகுதியுடையவர்.
- வட்டி மானியத்தைப் பெற விண்ணப்பதாரர் முதலில் வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF) வலைதளத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
- மற்ற திட்டங்களின் கீழ் இயந்திர மானியம் பெறாத பயனாளிகள் மட்டுமே இத்திட்டத்தில் பெற தகுதியுடையவர்.

**உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள் மற்றும் பிற பயனாளிகளுக்கான நிதி உதவி:**

- புதிய மையங்கள் நிறுவுவதற்கு திட்டச் செலவில் 75% மானியம் வழங்கப்படும், அதிகபட்சமாக ஒரு மையத்திற்கு ரூ. 18.75 இலட்சம் தவணை முறையில் வழங்கப்படும்.
- திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்பு குறைந்தபட்சம் 10% ஆக இருக்க வேண்டும் மற்றும் மீதமுள்ள தொகை வங்கி மூலம் கடனாக வழங்கப்பட வேண்டும்.

<u>தகுதி வரம்பு:</u>

1. விண்ணப்பதாரருக்கு, நிறுவனத்தின் உரிமை இருக்க வேண்டும் (உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு மட்டும் பொருந்தும்).
2. தனியுரிமை / கூட்டாண்மை நிறுவனமாக இருக்கலாம் (உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு மட்டும் பொருந்தும்).
3. விண்ணப்பதாரர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
4. ஒரு குடும்பத்தில் இருந்து ஒருவர் மட்டுமே நிதி உதவி பெற தகுதியுடையவர் ("குடும்பம்" என்பது தனியர், மனைவி மற்றும் குழந்தைகளை உள்ளடக்கியது).
5. திட்ட மதிப்பீட்டில், பயனாளிகளின் பங்களிப்பு குறைந்தபட்சம் 10% மற்றும் வங்கிக் கடனைப் பெறவும் விருப்பமுடையவராக இருக்க வேண்டும்.
6. ISO/BIS தரச்சான்றிதழ்கள் பெற்ற இயந்திரங்கள் மட்டுமே தகுதியானதாகக் கருதப்படும்.

விண்ணப்பிக்கும் முறை

- திட்டத்தின் கீழ் பயன்களைப் பெற ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள், விரிவான திட்ட அறிக்கையை (DPR) மாவட்ட அளவில் உள்ள வேளாண்மை துணை இயக்குநர் (வே.வ) அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பங்கள் முழுமையான திட்ட விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் தனி நபர் பொருளாதார மேம்பாட்டிற்கு ஏற்றதாக இருக்க வேண்டும்.
- புதிய மையங்களை நிறுவுவதற்கு AIF/PMFME திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட மாவட்ட அளவிலான ஆலோசகர்கள் (DLCs) / மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் (DRP) ஆகியோரின் உதவியினை விரிவான திட்ட அறிக்கையை (DPR) தயாரிப்பதற்கு பெற்று கொள்ளலாம்.

நிதி விடுவிப்பு:

i. விரிவான திட்ட அறிக்கையை வங்கி மதிப்பீடு செய்து, மொத்த திட்டச் செலவிற்கு (மானியம் உட்பட) ஒப்புதல் அளிக்கும்.

ii. வங்கியின் கடன் ஒப்பளிக்கப்பட்ட அனுமதி கடிதத்துடன், மானியத்தொகை விடுவிப்பிற்கான பரிந்துரை கடிதத்தினை, வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண்மை வணிகம்) தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும்.

iii. வங்கியிடமிருந்து கடன் தொகை பெற்று இயந்திரங்களை நிறுவிய பிறகு, தொழில்நுட்பக் குழுவானது, இரண்டு நிலைகளில் அதாவது வணிகம் தொடங்கிய பிறகு முதல் முறையும், 100% வணிக பரிவர்த்தனை செய்த பிறகு இரண்டாவது முறையும், மையங்களை ஆய்வு செய்து, தொகை விடுவிப்பதற்கான அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.

iv. மானியத் தொகையானது, உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் / கிராமப்புற இளைஞர்கள் / வேளாண் தொழில்முனைவோர்கள் / வேளாண் உட்கட்டமைப்பு நிதி (AIF) பயனாளிகளின் செயல்திறன் அடிப்படையில், முறையே 60% மற்றும் 40% ஆகிய இரண்டு தவணைகளில், அந்தந்த வங்கியில் வைத்திருக்கும் பயனாளிகளின் கடன் கணக்கில் விடுவிக்கப்படும்.

v. தொழில் துவங்கிய பிறகு, மாவட்ட அளவிலான குழு (மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு / மாவட்ட அளவிலான FPO கண்காணிப்புக் குழு / மாவட்ட அளவிலான வேளாண்மை கொள்முதல்

குழு) மையங்களை ஆய்வு செய்து அதன் நிலைத்தன்மை மற்றும் வணிக நடவடிக்கைகளை உறுதிசெய்து 60% மானியம் வெளியிட பரிந்துரைக்கும். மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், 60% மானியம், முதல் தவணையாக வழங்கப்படும்.

vi. வணிக பரிவர்த்தனை 100% ஐ அடைந்த பிறகு, மாவட்ட அளவிலான குழு (மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு / மாவட்ட அளவிலான FPO கண்காணிப்புக் குழு / மாவட்ட அளவிலான விவசாய கொள்முதல் குழு) மையங்களை ஆய்வு செய்து அதன் நிலைத்தன்மை மற்றும் வணிக நடவடிக்கைகளை உறுதிசெய்து (தணிக்கை செய்யப்பட்ட இருப்புநிலைக் குறிப்புடன் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) இரண்டாவது தவணை 40% மானியம் வழங்க பரிந்துரைக்கும். மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மீதமுள்ள 40% மானியம் பயனாளிகளின் செயல்திறன் அடிப்படையில் அதாவது 100% வணிக பரிவர்த்தனை அடைந்த பிறகு இரண்டாம் தவணையாக வெளியிடப்படும்.

vii. கடன் வழங்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குப் பிறகும், பயனாளியின் வங்கி கணக்கில் முறையான பரிவர்த்தனைகள் மற்றும் மையங்கள் முழு செயல்பாட்டில் இருந்தால், மானியத் தொகை பயனாளியின் வங்கிக் கணக்கில் நேர் செய்யப்படும். கடன் வழங்கப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் பயனாளியின் கணக்கு, NPA (செயல்படாத சொத்து) ஆக இருந்தால், தொழில்நுட்பக் குழு அறிக்கையின் அடிப்படையில் மானியத் தொகை வங்கியால் நேர் செய்யப்படும்.

<u>உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் மற்றும் பிற பயனாளிகளின் செயல்திறனைக் கண்காணித்தல்:</u>

- சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் (வே.வ) மையங்களின் செயல்திறனைக் கண்காணித்து, மையங்கள் தன்னிறைவான முறையில் இயங்குவதை உறுதி செய்ய வேண்டும்.
- மானியம் மூலம் விடுவிக்கப்படும் நிதி உரிய முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதை சரிபார்க்க வேண்டும்.
- உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் மற்றும் பிற பயனாளிகளின் செயல்திறன் அடிப்படையில், மாதாந்திர அறிக்கை வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலகத்துக்கு அனுப்பப்பட வேண்டும்.

- மேலும், சிறுதானிய முதன்மை பதப்படுத்தும் மையங்களின் செயல்பாடுகள் மற்றும் செயல்திறன், அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் (TNMM) வழிகாட்டுதல்களுக்கு இசைவாக இருப்பதை வேளாண்மை துணை இயக்குநர்கள் (வே.வ) உறுதி செய்ய வேண்டும்.

4. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்:-

இயந்திர அறுவடை மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்புக்கு ஏற்ற உயர்விளைச்சல் தரும் சத்துக்கள் செறிவூட்டப்பட்ட மற்றும் மாறிவரும் காலநிலைக்கு ஏற்ற நேர்த்தியான சிறுதானிய வகைகளை உருவாக்குதல்.

ஆராய்ச்சி திட்டத்தை செயல்படுத்தும் முறைகள்

சிறுதானியப் பயிர்களான சோளம், கம்பு, கேழ்வரகு, குதிரைவாலி, சாமை, தினை மற்றும் வரகு ஆகிய பயிர்களில் ஊட்டச்சத்துக்கள் மற்றும் தாதுக்கள் அதிகப்படுத்துதல் முக்கியமானதாக அமைகிறது. இயந்திர அறுவடையை பொருத்தமட்டில் பயிர்கள் முதிர்ச்சி அடையும் பொழுது சாயாத தன்மை கொண்டதாக இருத்தல் மிக அவசியமாகிறது. எனவே புதிய இன சந்ததிகளை உருவாக்கும் பொழுது பயிரின் வளர்ச்சித்தன்மை, அதிக மகசூல், அதிக அளவு ஊட்டச்சத்துக்கள், தாது உப்புக்கள், இயந்திர அறுவடைக்கு ஏற்ற பண்புகள், மணிகள் கொட்டாமை ஆகியவை ஒரு சேர இணைத்து மரபு வழியில் உருவாக்க வேண்டும் என்பது சவாலாகிறது. இதன் அடிப்படையில் சிறுதானிய ஆராய்ச்சித் திட்டம் இந்த ஆண்டு உருவாக்கி மேற்கொண்ட சவால்களை பூர்த்தி செய்வது அவசியமாகிறது.

சிறுதானியத்துறை கோயம்புத்தூர் மற்றும் சிறுதானிய மகத்துவ மையம், அந்தியந்தல் , திருவண்ணாமலை மாவட்டம் ஆகிய ஆராய்ச்சி நிலையங்களில் பல்வேறு இன விருத்தி முறைகள் செயல்படுத்தப்படுகிறது. இந்த ஆராய்ச்சிகளின் பலனாக சிறுதானியத்தில் பல புதிய இரகங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இருந்த பொழுதிலும் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப அனைத்து பண்புகளையும் ஒருங்கே கொண்ட மரபுவழித் தேடல், ஆய்வுக்கூடங்களில் தேர்வு செய்வது இன்றியமையாததாகிறது. இதன் அடிப்படையில், மேம்படுத்தப்பட்ட புதிய சந்ததிகள் பல்வேறு ஆராய்ச்சி திடல்களுக்கு உட்படுத்த வேண்டும்.

I. ஆய்வுக்குத் தேவையான உபகரணங்களை கொள்முதல் செய்தல்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கொள்முதல் வழிகாட்டுதல்கள் மற்றும் தமிழ்நாடு டெண்டர் வெளிப்படைத்தன்மைச் சட்டம் 2018 ஆகியவற்றைப் பின்பற்றி கொள்முதல் செய்யப்படும்.

(i). அமினோ அமில பகுப்பாய்வி

அமினோ அமில பகுப்பாய்வி உபகரணம் ஒரு புரதம் அல்லது பெப்டைட் ஹைட்ரோலைசேட்டின் அமினோ அமில கலவையின் தரமான பண்புகளை வெளிப்படுத்தும். தொடர்ச்சியான ஓட்ட அயனி பரிமாற்ற திரவ குரோமாட்டோகிராஃபியைப் பயன்படுத்துவதன் மூலம் அளவுசார் தகவல்களை வழங்கும்.

சிறுதானியங்களில் பொதுவாக குறிப்பிடத்தக்க அளவு அத்தியாவசிய அமினோ அமிலங்கள் உள்ளன, குறிப்பாக சல்பர் கொண்ட அமினோ அமிலங்களான மெத்தியோனைன் மற்றும் சிஸ்டைன் உள்ளது; பொதுவாக, சிறுதானியங்கள் உள்ளிட்ட தானிய புரதங்கள் லைசின் மற்றும் டிரிப்டோபான் உள்ளடக்கத்தில் குறைவாக உள்ளது. இது சாகுபடிக்கு ஏற்ப வேறுபடுகின்றன. இருப்பினும், பெரும்பாலான தானியங்களில் உள்ள அத்தியாவசிய அமினோ அமிலங்கள் மற்றும் வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள் அதிக அளவு உள்ளது. ஒரு புரதத்தின் மாற்றம் பொதுவாக இதன் மூலம் உணரப்படுகிறது. புதிய சந்ததிகளை உருவாக்கும் போது பல்வேறு சிறுதானிய பயிர்களில் அமினோ அமிலங்களின் அளவுகளில் உள்ள வேறுபாடுகள் மதிப்பிடப்பட வேண்டும். எனவே, ஆராய்ச்சித் திட்டத்திற்காக அமினோ அமில பகுப்பாய்வி உபகரணம் வாங்குவது அவசியம்.

(ii). க்ளோரோபில் மீட்டர்

மரபணு எதிர்வினையில் மாறுபாடுகள் மற்றும் மண்ணில் ஊட்டச்சத்துக்களின் போதாமை ஆகியவை வறட்சி அழுத்தங்களை அதிகரிக்கும் காரணிகளாகும். வறட்சியை தாங்கும் தன்மை கொண்ட சிறுதானிய இரகங்களை உருவாக்குவது முக்கியம். க்ளோரோபில் மீட்டர் பயிர்களின் தரத்தை மேம்படுத்தவும், தாவர இலைகளில் உள்ள குளோரோபில் அளவைக் குறிப்பதன் மூலம் பயிர் மகசூலை அதிகரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

II. தொடர் செலவினம்

1. <u>வயல்வெளி - பரிசோதனைகள்</u>

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள சந்ததிகளை தற்பொழுது வெளியிடப்பட்டு இருக்கும் இரகங்களுடன் ஒப்பிட்டு செய்வது, தர காரணிகளை உட்படுத்துவது, புறக்காரணிகளை அளவீடு செய்து, சிறந்த வளர்ப்புக்களை தேர்வு செய்து அடுத்த கட்ட பரிசோதனைக்கு உட்படுத்ததுவது இந்த ஆராய்ச்சியானது கோயம்புத்தூர் மற்றும் அந்தியந்தல் ஆராய்ச்சி நிலையங்களில் பரிசோதனை செய்த பிறகு, இதன் தரம் மற்றும் மாறாத பண்புகளை கண்டறிய பல்வேறு ஆராய்ச்சி நிலையங்களுக்கு முன்னெடுத்து செல்லப்படும்.

2. <u>புற காரணிகளை அளவீடு செய்தல்</u>

புதிய வளர்ப்புகளின் பண்புகளை ஆராய வயல் வெளித்திடலில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் பொழுது, அதன் உயரம், குட்டைத் தன்மை சாயாத தன்மை, சீரான முதிர்ச்சி அடைதல், வளர்ச்சி விகிதம் ஆகியவற்றை ஆராய்ந்து இயந்திர அறுவடைக்கு ஏற்ற வளர்ப்புக்களை தெரிவு செய்தல்.

3. <u>ஆய்வுக் கூடங்களில் தர பண்புகளை கண்டறிதல்</u>

புதியதாக கண்டறியப்படும் வளர்ப்புகள் மற்றும் சந்ததிகளில் ஊட்டச்சத்து மற்றும் தாதுஉப்புக்கள் அளவுகளை கண்டறிந்து தேர்வு செய்தல்

| | | |
|---|---|---|
| 1. | சோளம் | புரதம் மற்றும் அமினோ அமிலம் |
| 2. | கம்பு | இரும்பு சத்து மற்றும் துத்தநாகம் |
| 3. | கேழ்வரகு | கால்சியம் மற்றும் பிற தாது உப்புக்கள் |
| 4. | சாமை | புரதம், ஸ்டார்ச் |
| 5. | தினை | அமினோ அமிலம், நார்ச்சத்து |
| 6. | குதிரைவாலி | இரும்பு சத்து மற்றும் பிற ஊட்டச்சத்துக்கள் |
| 7. | வரகு | ஊட்டச்சத்து, நார்ச்சத்து, சாயாத தன்மை, ஒளிச்சேர்க்கைத் திறன் |
| 8. | பனிவரகு | புரதம், அமினோ அமிலம் மற்றும் பிற சத்துக்கள் |

4. <u>மூலக்கூறு ஆய்வகங்களில் மரபியல் பண்புகளை வகைப்படுத்துதல்</u>

மேம்பட்ட இனப்பெருக்க அணுகுமுறை மற்றும் மூலக்கூறு பகுப்பாய்தல் மூலம் புதிய வளர்ப்புகளின் பண்புகளை கண்டறிந்து குரோமோசோம் ஆய்வுக்கு உட்படுத்தி தரமான ஊட்டச்சத்து மிகுந்த சந்ததிகளை தேர்வு செய்து பரிசோதனைக்கு உட்படுத்துவதன் மூலம் நிலைத் தன்மை உடைய வளர்ப்புகளை எளிதில் கண்டறிய முடியும்.

5. <u>புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துதல்</u>

<u>அ. முன்னிலை செயல் விளக்கத்திடல்</u>

விவசாயிகளின் ஒத்துழைப்புடன் சிறுதானிய பயிர்களில் புதிய உயர் விளைச்சல் இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை பிரபலப்படுத்துதல். ஒரு மாவட்டத்திற்கு 10 ஏக்கர் என்ற வீதம் 25 மாவட்டங்களில் மொத்தம் 250 ஏக்கரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். (தேசிய உணவு பாதுகாப்புத் திட்டத்தின் நெறிமுறைகளை பின்பற்றி)

ஆ. விவசாயிகளுக்கு உற்பத்தி மற்றும் விதை உற்பத்தி பயிற்சி

சிறுதானிய இயக்கம் செயல்படுத்தப்பட உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு தரமுள்ள விதைகளை உற்பத்தி செய்தல், விதை கிராமங்களை ஊக்குவிக்கும் பொருட்டு பயிற்சி அளித்தல்.

ஒரு மாவட்டத்திற்கு 10 முன்னோடி விவசாயிகள் என்ற விகிதத்தில் 250 விவசாயிகளை தேர்ந்தெடுத்து ஐந்து குழுக்களாக பிரித்து விதை உற்பத்தி பயிற்சி கொடுக்கப்படும். இது மட்டுமின்றி 5 வயல் விழாக்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

III. கரு விதைகள் மற்றும் வல்லுநர் விதைகள் உற்பத்திக்கான இடு பொருள், சாகுபடி செலவினம் மற்றும் உற்பத்தியை பலப்படுத்துதல்

(அ). கரு விதைகள்

கரு விதைகள் உற்பத்தி செய்வது ஆராய்ச்சி நிலையங்களிலேயே தனிச்செடி தேர்வு மற்றும் அதன் சந்ததிகளின் வளர்ச்சி ஆகியவை பரிசோதனை செய்யப்பட்டு மரபுக் கலப்பு இல்லாமல் தேர்வு (100%) செய்து தூய்மையான விதைகளை உற்பத்தி செய்வது ஆகும். தற்பொழுது சிறுதானிய பயிர்களில் வெளியிடப்பட்டுள்ள அதிக மகசூல் கொடுக்கக் கூடிய இரகங்களை தூய்மைப்படுத்தி விதைச்சங்கிலிக்கு உட்படுத்தி உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஆ). வல்லுநர் விதைகள் உற்பத்தி

| வ. எண் | பயிர் | வல்லுநர் விதைகள் (டன்கள்) | ஆதார விதை உற்பத்தி மூலம் எதிர்பார்க்கப்படும் பரப்பளவு அதிகரிப்பு (எக்டர்) |
|---|---|---|---|
| 1 | சோளம் | 3.0 | 300 |
| 2 | கம்பு | 3.0 | 600 |
| 3 | கேழ்வரகு | 5.0 | 500 |
| 4 | சாமை | 2.0 | 200 |
| 5 | தினை | 1.0 | 125 |
| 6 | குதிரைவாலி | 2.0 | 175 |
| 7 | வரகு | 1.0 | 125 |
| 8 | பனிவரகு | 1.0 | 125 |
| | மொத்தம் | 18.0 | 2150 |

5. அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி

1. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் மூலமாக, விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோர்க்கு சிறுதானியங்களை, மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

2. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் மூலமாக, வேளாண்மை மற்றும் வேளாண் சகோதரத் துறையைச் சார்ந்த அலுவலர்களுக்கு சிறுதானியங்களை, மதிப்பு கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பாக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

3. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியின் மூலமாக, சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர்களுக்கு சிறுதானியங்களின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் குறித்து பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

4. தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்தின் கீழ் வழங்கப்படும் நிதியினை, எவ்விதக் குறைவுமின்றி, நிதி ஆண்டிற்குள் முழுமையாக சாதனை எய்தப்பட வேண்டும்.

5. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் தொடர்பான, பதிவேடுகள், புகைப்படங்கள், பத்திரிகை பிரசுரங்கள், வெற்றிக் கதைகள் மற்றும் இதர ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

6. தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் தொடர்பாக, மாதந்தோறும் சிறப்பு ஆய்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அபூர்வா
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்